6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

[முற்பகல் 10-55

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன் :

(1) 1983—84 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் மக்கள் நல் வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(2) 1987—88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வருவாய் வரவினங்கள்) அறிக்கையில் வருவாய்த் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(3) 1985—86-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் வருவாய்த் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(4) 1985—86 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் பொதுப் பணித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் பதினெட்டாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(5) 1979—80 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் ஊரக வளர்ச்சித் துறை தொடர்பான பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்தி மூன்றாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கையை அளிக்கின் கின்றேன்.

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1991 அக்டோபர் 4

(6) 1985—86 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் நகராட்சி நிருவாகம்—குடிநீர் வழங்கல் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(7) 1977—78 மற்றும் 1978—79 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மீது இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகள் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த இருபத்தி மூன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் முப்பத்தி மூன்றாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை) யில் ஊரக வளர்ச்சித் துறை குறித்து மேலும் தொடரப்பட்ட பரிந்துரையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஒன்றாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(8) 1984—85 மற்றும் 1985—86 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கைகளில் சில துறைகள் குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்திரெண்டாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(9) 1985—86 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் வாக்களிக்கப்பெற்ற மானியங்கள் மற்றும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கங்கள் ஆகியவை குறித்து ஏற்பட்ட கூடுதல் செலவு மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கையை அளிக்கின்றேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) (எண் 4/1989) தமிழ்நாடு மின்வாரியம் (பொருளியல் நிருவாகம்) தொடர்பான பத்திகள் குறித்த குழுவின் இருபத்திரெண்டாவது அறிக்கை மற்றும் தமிழ்நாடு மின் வாரியத்தின் 1981—82, 1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுக் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்,